# பெரிய புராணத்திற்கு முன்னோடியாக பதினொராம் திருமுறை: அதனை சேக்கிழார் பயன்படுத்திய நுட்பம்

**அசோகன் கலைச்செல்வி**
தென்கிழக்கு பல்கலைக்கழகம்
asokanchelvi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சிவனடியார் வரலாற்றினையும் மெய்யடியார் வாழ்வியல் அனுபவங்களையும் விபரிக்கும் சைவசமயப் பேரிலக்கியம் பெரியபுராணமாகும். இது சேக்கிழாரால் சோழர்காலத்தில் தொகுக்கப்பட்டது. பதினொராம் திருமுறையில் அமைந்த நூல்கள் நாற்பது பிரபந்தங்களாகும். பன்னிரு புலவர்கள் பாடிய நூலின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. சேக்கிழார் பெரியபுராணத்தின் மூலமாக திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும் திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரியபுராணத்தை படைத்தார். இவற்றுள் 11ஆம் திருமுறையை பெரியபுராணத்திற்கு முழுமையான முன்னோடியாக சேக்கிழார் கொண்டிருப்பாரா என்பது ஆய்வு பிரச்சினையாகும். இப்பிரபந்தத்தினை பேரிலக்கியமான பெரியபுராணத்திற்கு முன்னோடியாக அமைந்த விதம், அவற்றினை பயன்படுத்திக் கொண்ட நுட்பங்கள், அதில் சேக்கிழாரது நுட்பம் பங்களிப்பு ஆகியவற்றை ஆராய்வதே ஆய்வின் நோக்கங்களாகும். திருமுறைகளில் சேக்கிழாரது பெரியபுராணமும், பதினொராந் திருமுறையுமே ஆய்வின் எல்லையாக கொள்ளப்படுகின்றன. இவ்வாய்வின் முதல் நிலைத் தரவுகளாக பெரியபுராணமும் பதினொராந் திருமுறையும் கொள்ளப்படுகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளாக பெரியபுராணம் தொடர்பாக வெளிவந்த நூல்களும் பிற ஆக்கங்களும் அமைகின்றன.

***பிரதான சொற்பதங்கள்:*** *பெரியபுராணம், சேக்கிழார், முன்னோடி அடியார்கள், வரலாறு*

## அறிமுகம்

சைவ இலக்கியங்களில் மணிமுடியாக விளங்குகின்ற சைவத்திரு முறைகளில் ஒன்றான பெரிய புராணமானது பக்தி நெறியில் நின்று இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் தொண்டுகள் செய்து முக்தியடைந்த வரலாற்றினைக் கூறுகின்றது.

அநபாயச் சோழ மன்னனதும் காலத்தில் சமண மதத்தினுடைய செல்வாக்கானது படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. சிற்றின்பப்பகுதிகளை உள்ளடக்கிய சமண மதத்தினுடைய காவியமாக சீவக சிந்தாமணியை அரசனும் ஆதரிக்க இந்நிலையால் மனதளவில் பாதிக்கப்பட்ட மந்திரியாக பதவிவகித்த சேக்கிழார் சைவத்தின் மகிமையினை உணரச்செய்து அரசனை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் எழுதப்பட்டதே பெரிய புராணமாகும்.

தேவாரங்கள், அம்மையின் பாடல்கள், சேரர் பாடிய உலா கோவை என்பன சிறந்த மூலங்கள். அவற்றுள் சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியினை வழிநூல்களாகவும் கொண்டு இது அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு

காண்டங்களையும், 13 சருக்கங்களையும் 4287 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.

அவ்வாறே சைவத்திருமுறையில் பதினொராந் திருமுறையில் இறைவன் இயற்றிய திருமுகப்பாசுரம் முதலில் நிகழும் வகையில் உள்ள சிறப்பினையும் கடை சங்க காலத்தில் நக்கீரரால் இயற்றப்பெற்றதாக சொல்லப்பெறும் திருமுருகாற்றுப்படை சங்க நூல்களை பயில்வார் இல்லாமல் தமிழுலகம் மறைந்திருந்த காலத்திலும் கூடச் சைவத் திருமுறையிலே சேர்க்கப்பட்டதால் இந்நூல் மறையாமல் நின்று விளங்கும் சிறப்பினையும் கொண்டுள்ளது. 12 அருளாளர்கள் பாடிய 40 நூல்கள் 1400 பாடல்கள் தற்போதுள்ளது. சிவனைப்பற்றி நுவலும் நூல்கள் 25 விநாயகர் பெருமை பேசும் நுல் 3, முருகன் பெருமை பேசும் நூல் ஒன்று அடியார் பெருமைகள் பேசும் நூல்கள் 11 கொண்டு நம்பியால் தொகுக்கப்பட்டது.

சேக்கிழாரது பெரிய புராணத்திற்கு பதினொராந் திருமுறை முன்னோடியாக விளங்கிய விதத்தினை நோக்கும் போது பெரிய புராணத்தின் மூலங்களாக பதினொராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி பாடிய நூல்களும் கல்லாடர், பட்டினத்தார், பாடிய நூல்களும் விளங்குகின்றது.
பெரிய புராணம் தோன்ற காரணமாக இருந்த சூழ்நிலையில் இந்த நாட்டு மக்களை தூண்டுவத்கு இங்கு வாழ்ந்த அவர்களின் முன்னோர் வரலாறு பயன்படுவது போல பிறநாட்டு பெரியார் வரலாறுகள் பயன்படா. எனவே இப் பெரியார்களின் வரலாறுகளை தாம் அறிந்த முறையில் பாடாது நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டர் தொகை வரிபாடின நம்பியாண்டார் நம்பிகள் அவருடைய திருத்தொண்டர் திருவந்தாதி ஆரூரரின் ஓர் அடி வரலாற்றுக்கு விளக்கமும் விரிவும் தந்தவற்றையும் கொண்டு பாடுகிறார். ஆனால் நம்பியின் பாடல்களில் உள்ள அனைத்து விபரங்களையும் சேக்கிழார் எடுக்க விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

“அந்த மெய்ப்பதி கத்து அடியார்களை நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி புந்தி ஆரம்புகன்ற வகையினால் வந்தவாறு வாழாமல் இயம்புவோம்”
என்ற முறையில் நம்பின் உதவியை போற்றுகிறார் சேக்கிழார்.
அந்த வகையில் பெரிய புராணம் பாட எடுத்துக்கொண்ட அடியார்கள் அனைவரும் பதினொராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி அவர்கள் கூறிய அடியார்களே உதவியாக இருந்துள்ளனர்.
கண்ணப்பர் பற்றிய வரலாற்றினை சேக்கிழார் பாடுவதற்கு அவர்களுக்கு முன் நம்பியைத் தவிர நக்கீரர், கல்லாடர் ஆகியோரும் பாடியுள்ளனர். இவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றன.
நக்கீர தேவர்
“கானந் தலைவன் தம்மை : கண்ணுதல் .......... வாய்க்கிடும் உணவு வழக்கறியானே.”
(திரு கண்ணப்பர் தேவர் திருமறம்)
ஆகம பூசை இயற்றும் சிவகோசரியார் கண்ணப்பர் படைத்த ஊன் முதலிய அனுசிதத்தைக் கண்டு மனம் வருந்திக் காளத்தி நாதரிடம்
“ஈங்கொரு வேடுவன்.... நாயொடும் புகுந்து மிதித்து உழக்கித்..”
ஆனால் சேக்கிழர் சமுதாய பழக்கவழக்கங்களை சாடுவதற்கு கூர்மையான ஆயுதமாக ஐயர் என்பதை நுண்மையாக பயன்படுத்துகிறார்.
“நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை யேறத்தாமும் பேணுதத் துவங்கள் என்னும் பெருகுசோ பானம் ஏறி ஆணையாம் சிவத்தைச்சார அணைபவர் போல ஐயர்....”

எந்த விநாடியில் - காளத்தி மலையை கண்டு அதன் மேல் ஏறத் தொடங்கினாரோ அந்த விநாடியே நாகன் மகன் திண்ணன் என்ற நிலை நீங்காப் பட்டினத்தார் வியக்கும் படியான செயலைச் செய்தவராக ஆகிவிடுகிறார். எனவே ஐயர் என்ற விளிக்கும் உரிமை உடையவராகிறார்.

மேலும் தொகையை விரித்துப்பாடிய நம்பிகள் பொய்யடிமை இல்லாத புலவர் என்ற தொடர் முன்னும் பின்னும் தனியடியாரைக் கூறம் பட்டியலில் நடுவே இடம் பெற்றுள்ளதே என்றும் பாராமல்

‘‘தரணியில் பொய்ம்மை இல்லாத் தமிழ்ச் சங்கமதில் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்து ஒன்பது பல்புலவோர்….’’

(நாற்பது ஒன்பதின்மராகிய பல புலவர்கள்
நாற்பத்து ஒன்பதின்மரும் இன்னும் பல புலவர்களும் எனும் இருபொருள்களுக்கிணங்க.

‘‘அரண் சேவடிக்கே, பொருளமைத்து இன்பக் கவிபல பாடும் புலவர்களே’’

கபிலர், பரணம், நக்கீரர் என்பவர்களை என்று பெயர் குறிப்பிட்டதும் ஒருவகையில் சரியே என்றாலும் இவர்களை சங்கப்புலவர்கள் என்று நினைத்து கூறியதுதான் குழப்பத்தில் இதன் உண்மைப்பொருள் எதுவாக இருக்கலாம் என்பதில் சேக்கிழாருக்கு இப்பாடலால் ஏற்பட்ட இடையூற்றை ஏற்படுத்தினாலும், நம்பி இவ்வளவு விரிவாக கூறிவிட்டு பிறகு அது தவறு என்று எடுத்துக்காட்டவோ அன்றி முற்றாக
வேறான பொருள் கூறவோ சேக்கிழாருக்கு முடியாமற் போய்விட்டது. போகிர போக்கில் சேக்கிழாரும் இதனை கூறிச் செல்வதையுங் காணலாம்.

தனி ஓர் அடியாராகிய மாணிக்கவாசகர் ‘‘எலும்பை உருக்கும் பாடல்கள் என்று வேற்று நாட்டவரும் புகழ்ந்து போற்றும் ‘‘ திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகர்’’ எனும் சிறப்புடைய திருவாசகத்தை தந்தவர் இப்படிப்பட்ட சமயக்குரவரை பதினொராந் திருமுயையில் இதனை பின்பற்றி திருதொண்டர் புராணமான பெரிய புராணத்திலும் மாணிக்கவாசகர் பற்றிய குறிப்பு சேக்கிழாரால் குறிப்பிடப்படவில்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

மேலும் பெரிய புராணத்துக்கு முன்னோடியாக பதினொராந் திருமுறை எனும் அடிப்படையில் அனல் வாதம், புனல் வாதம், கழுவேற்றம் என்பவற்றிற்குச் சான்றாக அமைந்த விதத்தில்

‘‘தங்கள் வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோமாகில்வெங்கழு ஏற்றுவான் இவ் வேந்தனே என்று சொன்னார்.’’

என சேக்கிழார் பாடுவதற்கு

‘‘செய்யனே!... பையவே சென்று பாண்டியற்காகவே’’ என்ற இந்த ஒரு குறிப்பைத் தவிர நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியின் 33,60 கிய இரு பாடல்களில்
வரும் குறிப்புகளுடன் செவிவழிச் செய்திகள் என்பனவே ஆதாரம்

‘‘ஆர்த்த சமணர் அழிந்தது கண்டு மாற்றாங்கவரைக் கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன்…..’’

(திருத்தொண்டர் திருவந்தாதி)

‘‘கோதை வேல் தென்னன்……. புண்கெழுவு செம்புனன் ஆறு ஓடப் பொருதவரை வண்கழுவில் தைத்த மறையோனை ………’’ என வரும்

ஆளுடைய பிள்ளையார் உலா நூலிலும் காணலாம்.’ எனவே நம்பியை பொறுத்தமட்டில் இந்தச் செவிவழிச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை அறியமுடிகிறது. ஆனால் அவர் கூற்றுக்களில் சமணர் கழுவேறினர்,

சமணர் கழுவேறினர், சமணர் கழுவேற்றப்பட்டன் சம்பந்தரிடம் தோற்று ஏறினர் ,சம்பந்தர் அவர்களை ஏற்றினார் என்ற முறையில் அமைந்துள்ளது ஏறினார் - அவர்களாகவே ஏறினர் - மன்னன் ஏற்றினான் என்ற வேறுப்பாட்டை அறியாது ஒன்றாக பாவித்து நம்பிபாடுகிறார். இவருடைய பாடல்களை மட்டும் தமக்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டே சேக்கிழார் ஏறினார்கள் என்றே பாடிச் செல்கிறார். இதில் இம்மூலங்களை எங்கனம் ஆய்ந்து எடுத்து பயன்படுத்தினார். என்பதை ஒருவாறு காண முடிகிறது.

**முடிவுரை:**

ஆகவே இவ் ஒரு சில குறிப்புக்களை கொண்டு நோக்கும் போது சேக்கிழார் பெரியபுராணத்திற்கு முன்னோடியாக பதினோராந் திருமுறையினை ,அடியார் வரலாற்றினை அறிந்து கொள்ளல் உட்பட வரலாற்று சம்பவங்களையும் பொறுத்தமான வகையில் ஆய்வு செய்து நுட்பமாக பயன்படுத்திய விதத்தினையும் அறிந்துக்கொள்ள முடிகின்ற வகையில் எங்கனம் வழிவகுத்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

பெரியபுராணத்தில் சொல்லப்படுகின்ற தகவல்கள் பல உண்மையான தகவல்களாக இருப்பதனை சாசனங்கள் மற்றும் மெய்கீர்த்திகளினூடாக அறிந்துக்கொள்ளளாம் என்றால் அந்தளவிற்கு 11ம் திருமுறையில் குறிப்பிப்படும், குறிப்பாக நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் பெரியப்புராணத்திற்கு முன்னோடியாக அமைந்துள்ளது. என்பதில் எவ்வித ஐயமும்மில்லை.

**உசாத்துணை நூல்கள்**

01.அனைத்துலகச் சைவ மாநாடு ஆய்வடங்கள், (2016) இந்து நாகரிகத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

02.இராசமாணிக்கனார் மா, (1945), சேக்கிழார், எடியுக்கேசன், பப்ளிகேசன்ஸ், சென்னை.

03.ஞானசம்பந்தன், அ.ச, (1987), பெரிய புராணம் - ஓர் ஆய்வு, காஞ்சிபுரம் தத்துவமயம், தஞ்சாவூர்.